**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - 2019**

---

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆந் திகதிய 3706 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிக்கையானது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை கொண்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவர்கள் கருத்தில் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தந்திரோபாயங்கள் நகர அபிவிருத்தி செயற்திட்டம் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவராகவுள்ளது. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்கான உயர் மட்ட தயார்ப்படுத்தலை தீவிரப்படுத்துவது செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,090.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியனானதுடன் அதில் ரூபா 883.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மார்ச் 06 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடு | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ரூபா 2,909,686 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் அச் சொத்தக்களிற்கான ரூபா 120,197 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பிபிஈ குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்கான சரியான பெறுமானத்தேய்வு செலவினம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | அதிகரிக்கும் நிர்வாக கிரயங்கள் தவிர அட்டுறு அடிப்படையில் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டது. | பிபிஈ இன் உள்ளபடியான கிரயம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதுடன் நிலையான சொத்துக்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் உப அலுவலகங்களை ஸ்தாபிப்பதற்கு வாடகைக்கு பெறப்பட்ட வீடுகளிற்கு செலுத்தப்பட்ட ரூபா 800,000 தொகையான முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் முற்பணமொன்றாக காட்டப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய முற்பணங்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | முற்பணக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும் கிரயங்களாக காட்டப்படுகின்றதுடன் நாங்கள் காசு அடிப்படையின் கீழ் அதிகரிக்கும் கிரயத்தை கருதுகின்றோம். | தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| கூறு | நடவடிக்கை | தாமதம்/ கணக்காய்வு விடயம் | விளைவு | தாமதங்களிற்கான காரணம் | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| நிலைபேறான நகர உட்கட்டமைப்பை இனங்காணுதல் | திட்டமிடல், விபரமான வடிவமைப்பு மற்றும் பெறுகை, நகர நெரிசல் போக்குவரத்து, சுற்றாடல் முகாமைத்துவ சேவையை தரமுயர்த்துதல் என்பவற்றிற்கான மதியுரை சேவை | செயற்திட்டத்தின் செயற்திட்ட நிர்வாக கையேட்டின் (பிஏஎம்) பிரகாரம் மதியுரை சேவை நடவடிக்கைகள் 2018 நவம்பரில் ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. 2019 மே 01 இல் ரூபா 833 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 3 மதியுரை சேவை வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் 04 மாத தாமதத்தின் பின்னர் மதியுரை சேவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்ததன் விளைவாக செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மேலும் தாமதமாகியிருந்தது. | பட்டியலிடப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன. | பெறுகை செயன்முறையின் மோசமான செயலாற்றல். | 2018 செப்தெம்பரில் முன்மொழிவிற்கான கோரிக்கை (ஆர்எவ்பி) வழங்கப்பட்டு 2018 நவம்பரில் முடிவுறுத்தப்பட்டது. | மதியுரை சேவைகளின் பெறுகை வினைத்திறனாக முகாமை செய்யப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது மூன்று மதியுரை அறிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கைகளில் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்ததன் காரணமாக அவ் அறிக்கைகள் செயற்திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக செயற்திட்ட நடவடிக்கைகள் மற்றும் பிரதான கடனை அங்கீகரித்தல் என்பன அதேபோல் தாமதமடையலாம். | பட்டியலிடப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியின் போது செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தன. | உள்ளூர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் அமைச்சு ஒருங்கிணைப்புக் குழு தாமதமடைந்திருந்தன. | நடைபெறும் மதியுரை வேலைகளை பெற்றுக்கொள்வதற்கும் தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்கும் மதியுரையாளர்களின் வேலைகளை கண்காணிப்பதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு வளம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் கடனளிக்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 838.88 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 4.65 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 53.04 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.32 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 9 மாதங்கள் கடந்த பின்னர் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 72.90 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 0.40 மில்லியன் மீதி செயற்திட்ட நடவடிக்கைகளின் மெதுவான செயன்முன்னெற்றம் மற்றும் மோசமான நிதி | செயற்திட்ட நடவடிக்கைகளிற்கான நிதியளிப்பு முகாமைத்துவம் பாதிப்படைவதுடன் செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுல்ப்படுத்தல் தொடர்பான மெதுவான செயன்முன்னேற்றத்திற்கு இது வழிவகுக்கும். | ஏடிபீ இடமிருந்து முற்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஆறு மாதங்களிற்கு எங்களால் எதிர்வுகூறப்பட வேண்டியிருந்ததால் வங்கிக் கணக்கில் இக் காரணத்தினால் கணக்கீட்டு மீதி உயர் மீதியை காட்டக்கூடும். | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியின் போது பாதீட்டின் பிரகாரம் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

எதிர்வுகூறல் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (டொலர்) கணக்கில் பயன்படுத்தப்படாத கட்டுநிதியாக காணப்பட்டது.

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயம்

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 பதவிகளை கொண்டிருந்ததுடன் அதில் சிரேஷ்ட செயற்திட்ட முகாமையாளர், பெறுகை நிபுணர் மற்றும் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் போன்ற முக்கிய முகாமைத்துவ பதவிநிலைகள் உள்ளடங்கலாக 8 பதவிகள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாக காணப்பட்டன.

## 3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| மதியுரை ஒப்பந்த உடன்படிக்கையின் 24.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 544 மில்லியன் பெறுமதியான 2 மதியுரை ஒப்பந்தங்களிற்காக தொழில்சார் பொறுப்பு காப்புறுதி மேவுகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் காப்புறுதி மேவுகையை பெற்றுக்கொள்ளாமல் மதியுரையாளர்களிற்கு முற்பணங்களாக ரூபா 41.99 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந் நிலைமை ஒப்பந்த நிபந்தனையை மீறியிருந்தது. | எஸ்யூடிபி இற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் முற்பணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | மதியுரை உடன்படிக்கையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |